# அரையாண்டுத் தேர்வு – 2023 கிருஷ்ணகிரி மாவட்டம்

## 11-ஆம் வகுப்பு – வரலாறு

### பகுதி – 1

1. அ. வேளாண்மை
2. அ. குரு – பாஞ்சாலம்
3. ஈ. 4
4. இ. சாரநாத்
5. ஆ. ஜேம்ஸ் பிரின்செப்
6. அ. ஆந்திரா – கர்நாடகா
7. அ. செலியுகஸ் நிகேடர்
8. ஈ. கதைகள், புராணங்கள்
9. ஆ. பிரியதர்ஷிகா
10. ஈ. கம்போடியா
11. ஆ. 17
12. இ. கொற்கை
13. அ. பன்றி
14. அ. சூர்தாஸ்
15. அ. கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல
16. அ. மராத்தியர்
17. ஆ. சாம்பாஜி, ராஜாராம் சாஹு, இரண்டாம் சாம்பாஜி
18. ஆ. தாமஸ் மன்றோ
19. இ. புதிய தலைப்பாகை
20. ஆ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

### பகுதி – 2 (ஏதேனும் 2 குறிப்புகள்)

21.

**வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் யாவை?**

- தொல்லியல் ஆய்விடங்கள்
- நிலவியல் அடுக்குகள்
- விலங்குகளின் எழும்புகள்
- படிமங்கள், கற்கருவிகள்
- பாறை ஓவியங்கள்
- கைவினைப் பொருட்கள்
- எழுத்துவடிவச் சான்றுகள் இக் காலத்தில் இல்லை.

22.

**மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?**

- மகாவீரரின் போதனைகளின் மையக்கருத்து "அஹிம்சை"
- சமணம் வலியுறத்திய அளவிற்கு"அஹிம்சையை" வேறு எந்த மதமும் வலியுறுத்தவில்லை.
- சமணம் கடவுளின் இருப்பை மறுத்ததோடு, உருவ வழிபாட்டையும் எதிர்த்தது.

23.

**எதன் காரணமாக மகா அலெக்சாண்டர் போரஸின் அரியணையைத் திருப்பித் தந்தார்.**

- ❖ ஜீலம் நதிக்கும் பியாஸ் நதிக்கும் இடைப்பட்ட பகுதியை ஆட்சி செய்தவர் போரஸ்
- ❖ ஹைடாஸ்பெஸ் என்ற இடத்தில் பொ.ஆ.மு 326 இல் அலெக்சாண்டருக்கும் போரசுக்கும் இடையே நடைபெற்ற போரில் போரஸ் தோல்வியடைந்து சிறைப்பிடிக்கப்பட்டார்.
- ❖ பின்னர் போரசின் கண்ணியத்தால் ஈர்க்கப்பட்ட அலெக்சாண்டர் நிபந்தனையின் பேரில் போரசுக்கு அரியணையைத் திருப்பித் தந்தார்

24.

**அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்துக் கூறுக.**

- ❖ அலகாபாத் தூண் கல்வெட்டு சமுத்திரகுப்தரின் ஆட்சி மற்றும் சாதனைகளைக் குறிக்கிறது
- ❖ இதனைப் பொறித்தவர் ஹரிசேனர்
- ❖ இது 33 வரிகளில் நாகரி வரிவடிவத்தில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது.

25.

**திருபுறம்பியம் போரைப் பற்றி நீ அறிந்தது என்ன ?**

- ❖ திருபுறம்பியம் போர் பல்லவர்களுக்கும் – பாண்டியர்களுக்கும் இடையே நடைபெற்றது.
- ❖ பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன், மேலைக் கங்கர், சோழர் உதவியோடு திருபுறம்பியம் (ஸ்ரீபிரம்பியம்) என்ற இடத்தில் பாண்டியரை எதிர்த்து போரிட்டார்
- ❖ இதில் பாண்டியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். பல்லவர்கள் வெற்றி பெற்றனர்

26.

**பாண்டிய அரசின் மீதான மாலிக் காபூரின் படையெடுப்பின் விளைவுகள் யாவை ?**

- ❖ மதுரையில் தில்லி சுல்தானிய அரசுக்குக் கட்டுப்பட்ட ஒரு அரசு உருவாகியது
- ❖ அரச மரபினர் பாண்டிய நாட்டை தனித்தனியாக பிரித்துக் கொண்டனர்
- ❖ சொக்கநாதர் கோவிலை இடித்து விலை மதிக்க முடியாத பொருள்களை மாலிக்காபூர் எடுத்துச் சென்றார்

27.

**விஜயநகரைப் பற்றி அறிய உதவும் தொல்லியல் சான்றுகள் பற்றி எழுதுக.**

- ❖ க ன்னடம், தெழுங்கு, தமிழ் அகிய மொழிகளில் உள்ள ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள்
- ❖ சமஸ்கிருத மொழியிலுள்ள பல செப்புப் பட்டயங்கள்
- ❖ இலக்கியச் சான்றுகள் மற்றும் தொல்லியல் சான்றுகள்
- ❖ அரசர்கள் வெளியிட்ட நாணயச் சான்றுகளும் அதிக அளவில் கிடைத்துள்ளன

28. கபன

**சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி ஒரு குறிப்பு வரைக**

- ❖ சரஸ்வதி மஹால் நூலகம் நாயக்க மன்னரால் கட்டப்பட்டது.
- ❖ அது இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்டது
- ❖ மராத்தி மொழியில் அமைந்த ஆவணங்கள் மோடி எழுத்து வடிவில் எழுதப்பட்டன

29.

www.Padasalai.Net

**1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டத்தை விவரி.**

- ❖ கம்பெனி ஊழியர்களின் வரவு செலவு கணக்குகளை இயக்குநர் குழு பிரிட்டிஷ் கருவூலத்திற்குத் தெரியப்படுத்துவது.
- ❖ ஆளநர், தலைமைத் தளபதி, இரு ஆலோசகர்கள் கொண்ட குழு வருவாய் வாரியாக செயல்படும்.
- ❖ வருவாய் வாரியம் – வருவாய் குறித்து விவாதித்தது.
- ❖ வங்காளத்தின் ஆளுநராக வாரன் ஹேஸ்டிங்ஸ் நியமிக்கப்பட்டார்

30.

**சமூக சீர்திருத்தத்திற்கு இராஜாராம் மோகன்ராயின் பங்களிப்புகள் யாவை ?**

- ❖ இராஜாராம் மோகன்ராய் உருவ வழிபாடு, சாதிமுறை, மூடநம்பிக்கைகள் ஆகியவற்றை கண்டனம் செய்தார்
- ❖ குழந்தைத் திருமணம் பர்தாமுறை, உடன்கட்டை ஏறுதல் ஆகியவை ஒழிக்கப்படவேண்டும் என்று கூறினார்
- ❖ கைம்பெண் மறுமணத்தை ஆதிரித்தார்
- ❖ 1829 இல் உடன்கட்டை ஏறுதல் குற்றம் என சட்டம் இயற்ற துணையாக இருந்தார்

## பகுதி – 3 (ஏதேனும் 3 குறிப்புகள்)

31.

**ரிக் வேத கால சமூகப்பிரிவுகளைக் கோடிட்டு காட்டுக.**

- ❖ ரிக்வேதம் "ஆரிய வர்ண", "தச வர்ண" என்று குறிப்பிடுகின்றது.
- ❖ ரிக் வேதத்தில் "புருஷசுக்தம்" என்னும் பகுதியில் வர்ணங்கள் பற்றி குறிப்பிடுகிறது.
- ❖ புருஷ பலியிடப்பட்ட போது அவனுடைய வாயிலிருந்து தோன்றியவர்கள் பிராமணர்கள்
- ❖ இரண்டு கைகளிருந்து தோன்றியவர்கள் சத்திரியர்கள்
- ❖ தொடைகளிலிருந்து தோன்றியவர்கள் வைசியர்கள்
- ❖ கால்களிலிருந்து தோன்றியவர்கள் சூத்திரர்கள் என்று கூறுகிறது.

32.

**இந்தியாவில் மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கங்களை குறிப்பிடுக.**

- ❖ அலெக்சாண்டரின் படையெடுப்பால் நான்கு வணிகப் பெருவழிகள் திறக்கப்பட்டன.
- ❖ கிரேக்க வணிகர்களும், கைவினைக்கலைஞர்களும் இந்தியா வந்தனர்.
- ❖ கிரேக்க குடியிருப்புகளை ஏற்படுத்தினர்.
- ❖ இந்திய – கிரேக்கம் இடையே நேரடிதொடர்பு ஏற்பட வழிவகுத்தது.
- ❖ புதிய கலைப் பாணி உருவாகியது.

33.

**மினாண்டர் குறித்து நீங்கள் அறிந்தவை யாவை ?**

- ❖ இந்தோ கிரேக்க அரசர்களிலேயே நன்கு அறியப்பட்டவர் மினாண்டர்.
- ❖ நாட்டின் வடமேற்கில் பெரிய பகுதியை ஆட்சி செய்ததாக தெரிகிறது.
- ❖ அவரது நாணயங்கள், காபூல், சிந்து சமவெளியில் இருந்து மேற்கு உத்திரப்பிரதேசம் வரை கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- ❖ மினாண்டரை கலிங்க அரசர் காரவேலனால் தடுத்து நிறுத்த முடியவில்லை.
- ❖ நாகசேனருடன் பௌத்தம் குறித்த கேள்வி பதில் விவாதத்தில் ஈடுபட்டுள்ளார்

34.

**எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச் சின்னங்கள்**

**எல்லோரா**

- முதலாம் கிருஷ்ணரால் எல்லோராவில் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயில் ஒரே கல்லால் செதுக்கப்பட்டது ஆகும்.
- ஒரே பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டதாகும்.
- இதில் கைலாச மலையை ராவணன் அசைப்பது, நடனமாடும் சிவன், விஷ்ணுவும் லட்சுமியும் இசையில் லயித்திருப்பது போன்று கற்பலகையில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் உள்ளன.

**எலிஃபெண்டா**

- எலிஃபெண்டாவில் நடராஜர், சதாசிவம், ஆகியோரின் சிற்பங்கள், அர்த்தநாரீஸ்வரர், மகேச மூர்த்தி சிலைகள் உள்ளன.
- அதில் மகேசமூர்த்தியின் (சிவன்) மூன்று முகங்கள் கொண்ட 25 அடி உயரமுள்ள மார்பளவுச் சிலை இந்தியாவில் உள்ள கவின்மிகு சிற்பங்களுள் ஒன்றாகும்.

35.

**முகமது பின் துக்ளக்கின் சோதனை முயற்சிகள் தோல்வியடைந்ததற்கான காரணங்கள் என்னென்ன ?**

**தலைநகர் மாற்றம்**

- தௌலதாபாத்தில் இருந்து வட இந்தியாவை ஆள்வது கடினம் என்பதை உணர்ந்தார்.
- மீண்டும் தலைநகரை டெல்லிக்கே மாற்றினார். இத்திட்டம் தோல்வியில் முடிந்தது.

**அடையாள நாணயம்**

- வெள்ளி நாணயத்திற்கு பதில் வெண்கல நாணயங்களை வெளியிட்டார்.
- போலி நாணயங்கள் அச்சடிக்கப்பட்டது. இதனால் நாணயத்தின் மதிப்பு குறைந்தது.
- மீண்டும் வெள்ளி நாணயம் அச்சடிக்க வேண்டியதாயிற்று. இத்திட்டமும் தோல்வியில் முடிந்தது.

**வேளாண் விரிவாக்கத்திட்டம் (தோவாப் வரிவிதிப்பு)**

- தோவாப் பகுதியில் கடுமையான பஞ்சம் நிலவிய போது நிலவரி விதிக்கப்பட்டது.
- மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இத்திட்டமும் தோல்வியில் முடிந்த து.

36.

**ராக்சஷி தங்கடி போர் (1565)**

- தக்காண சுல்தான்கள் தங்களது பரஸ்பர பகைமையை மறந்து ஒன்றுபட்டு விஜயநகர அரசின் மீது இறுதிப் போர் தொடுத்தனர்
- 1565, ஜனவரி 23 இல் தலைக்கோட்டை (அல்லது) ராக்சஷி தங்கடி என்ற இடத்தில் போர் நடைபெற்றது.
- ராக்சஷி தங்கடி போரில் விஜயநகர அரசு தோல்வியடைந்தது. தக்காண அரசுகள் (பாமினி அரசுகள்) வெற்றி பெற்றது.
- வெற்றி பெற்ற அரசுகள் விஜயநகரத்துக்குள் நுழைந்து நகரையே சூறையாடியது.
- விஜயநகர படைக்குத் தலைமை ஏற்ற ராமராயர் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்

37.

**"தீன் இலாஹி"பற்றி நீவிர் அறிவது யாது ?**

- ❖ அக்பர் 1852 இல் தீன் இலாஹி என்ற புதிய தத்துவத்தை வெளியிட்டார்
- ❖ இத்தத்துவத்தை விளக்கும் சரியான சொல் தௌகித் – இ– இலாகி ஆகும்.
- ❖ தௌகித் – இ– இலாகி என்பதன் பொருள் "தெய்வீக ஒரு கடவுள் கோட்பாடு" ஆகும்.
- ❖ இது புதிய மதம் அல்ல. இது ஒரு தத்துவக் கோட்பாடு ஆகும்.

38.

**ஆம்பூர் போர்**

- ❖ சந்தாசாகிப் மற்றும் அன்வாருதீன் இடையே ஆம்பூர் போர் நடைபெற்றது
- ❖ சந்தாசாகிப் பிரெஞ்சுப் படைகளின் உதவியுடன் போரிட்டார்
- ❖ ஆம்பூர் போரில் ஆற்காடு நவாப் அன்வாருதீன் கொல்லப்பட்டார்
- ❖ அன்வாருதீன் மகன் முகமது அலி தப்பியேடினார்
- ❖ சந்தாசாகிப் ஆற்காடு நவாப் ஆனார்

39.

**1857 ஆண்டு புரட்சியின் விளைவுகள் யாவை ?**

- ❖ கானிங்பிரபு இந்தியாவின் முதல் வைசிராய் ஆனார்
- ❖ இந்தியா அரசுச் செயலர் மூலம் ஆளப்படும்
- ❖ 15 உறுப்பினர்கள் கொண்ட இந்திய கவுன்சில் அரசு செயலருக்கு உதவி செய்யும்
- ❖ கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்குழுவும் கட்டுப்பாட்டு குழுவும் ஒழிக்கப்பட்டன
- ❖ இந்திய அரசர்களின் கண்ணியம், உரிமைகள் மதிக்கப்படும்
- ❖ கிளர்ச்சியாளர்அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழுங்கப்படும்
- ❖ சாலைகள், இருப்புப்பாதைகள், தந்தி, நீர்ப்பாசனம் ஆகியவை முடுக்கிவிடப்படும்
- ❖ வாரிசு இழப்புக் கொள்கை, நாடிணைக்கும் கொள்கை கைவிடப்படும்

40.

**எம்.ஜி. ரானடே**

- ❖ "தேசிய சமூக மாநாடு" என்னும் அமைப்பை உருவாக்கினார்
- ❖ விதவை மறுமணச் சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார்
- ❖ தக்காணக் கல்விக் கழகம் என்று அமைப்பை தீவிரமாக முன்னெடுத்துச் சென்றார்
- ❖ நாட்டுக்குத் தன்னலமற்ற சேவை செய்வதற்கு எத்தகைய கல்வி அவசியமோ அக்கல்வியை இளைஞர்களுக்கு வழங்குவதை இவ்வமைப்பு நோக்கமாகக் கொண்டிருந்தது

## பகுதி – 4 (ஏதேனும் 5 குறிப்புகள்)

41. அ

**வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக.**

**வரலாற்றுக்கு முந்தைய இந்தியா**

- ❖ எழுத்து முறை தோன்றுவதற்கு முந்தைய காலகட்டம், வரலாற்றுக்கு முந்தைய இந்தியா எனப்பகிறது
- ❖ இது கற்காலம் எனவும் குறிக்கப்படுகிறது
- ❖ இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், வங்கதேசம் ஆகியவை அடங்கிய தென்கிழக்கு ஆசியா முழுவதும் ஒரே பகுதியாக இருந்தது.

**கால வரிசை**

- ❖ வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய மனிதர்கள் இந்தியாவில் 10 இலட்சம் முதல் 20 இலட்சம் வரையான ஆண்டுகளுக்கு முன்பே இருந்தார்கள் எனத் தெரிகிறது.

**மனித இனம் (வரலாற்றுக்கு முந்தைய இந்திய மனித இனம்)**

- ❖ மனித இனத்தின் மூதாதையர் முதலில் ஆப்ரிக்காவில் தோன்றி பின்பு பல இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்
- ❖ ஆப்ரிக்காவை விட்டு முதன்முதலாக வெளியேறிய மனிதஇனம் ஹோமோஎரக்டஸ் ஆகும்.

**கருவிகள்**

- ❖ வரலாற்றுக்கு முந்தைய இந்திய மக்கள் கற்கருவிகளை பயன்படுத்தினர்
- ❖ இந்தியாவில் ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாடு நிலவியது.

ஆ

**தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க**

**ஆதிச்சநல்லூர்**

- ❖ ஆதிச்சநல்லூர் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- ❖ 1876 ல் ஜெர்மனியைச் சேர்ந்த ஆண்டிருஜாகர் அகழ்வாய்வை மேற்கொண்டார்.
- ❖ தாழிகள், மட்பாண்டங்கள், ஆணிகள், கல்மணிகள், ஆயுதங்கள், வெண்கலப் பொம்மைகள் கிடைத்துள்ளன.

**பையம்பள்ளி**

- ❖ பையம்பள்ளி, வேலூர் மாவட்டத்தில் உள்ளது.
- ❖ 1960 ல் இந்தியத் தொல்லியல் துறை அகழ்வாய்வை நடத்தியது.
- ❖ கருப்பு மற்றும் சிகப்பு நிற மட்பாண்டங்கள், ஈமத் தாழிகள் கண்டறியப்பட்டன.

**கொடுமணல்**

- ❖ ஈரோடு மாவட்டத்தில் கொடுமணல் அமைந்துள்ளது.
- ❖ அண்மையில் 2012 இல் அகழ்வாய்வு மேற்க்கொள்ளப்பட்டன.
- ❖ மட்பாண்டங்கள், ஆயுதங்கள், கருவிகள், அணிகலன்கள், மணிகள் கிடைத்துள்ளன.

42. அ

**புத்தரின் எண் வழிப்பாதையை விவரி.**

**நான்கு பெரும் உண்மைகள்**

- புத்தர் துன்பம் குறித்த நான்கு உண்மைகளை வெளியிட்டார்
- ஆசையே துன்பத்திற்கு காரணம்
- ஆசையை ஒழித்தால் துன்பத்தில் இருந்து விடுபடலாம்
- அவ்வாறு துன்பத்தில் இருந்து விடுபட எண்வழிப்பாதையை கடைபிடிக்கக் கூறினார்.

**எண்வழிப்பாதைகள்**

- நன்னம்பிக்கை
- நல்லார்வம்
- நல்வாய்மை
- நற்செயல்
- நல்வாழ்க்கை முறை
- நன்முயற்சி
- நற்சிந்தனை
- நல்ல தியானம்

**பிற கருத்துக்கள்**

- புத்தர் கடவுளின் இருப்பை ஏற்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை.
- சாதி முறையை ஏற்கவில்லை
- சமத்துவத்தை வலியுறுத்தியது
- அன்பையும், அஹிம்சையையும் வலியுறுத்தியது
- இறைச்சி, மீன், மது, விஷம் விற்பனை செய்வதை அனுமதிக்கவில்லை.

ஆ

**அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றிக் கூறுக.**

- அசோகருடைய கல்வெட்டுக் கட்டளைகள் மௌரியப் பேரரசு பற்றிய தகவல்களை தருகின்றன.
- அசோகர் மொத்தம் 33 கல்வெட்டுக் கட்டளைகளை வெளியிட்டார். அவை
- 14 பாறைக் கல்வெட்டுகள்
- 7 தூண் கல்வெட்டுக் கட்டளைகள்
- 2 கல்வெட்டுக் கட்டளைகள்
- சில சிறு தூண் கல்வெட்டுக் கட்டளைகள்.
- இக் கல்வெட்டுக் கட்டளைகள் பிராமி, மகதி, பிராகிருதம் மற்றும் கரோஷ்டி எழுத்து முறையில் உள்ளன.
- அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் அவர் ஆட்சி செய்த ஒரு பெரிய பேரரசின் பரப்பினைக் காட்டுகிறது மற்றும் பேரரசின் எல்லைக்கு வெளியேயான நிலப்பரப்புகளைக் கூறுகிறது.
- இந்த கல்வெட்டுக் கட்டளைகள் அமைதி, நேர்மை, நீதி ஆகியவற்றில் அசோகருக்கு இருந்த நம்பிக்கை, மக்களது நல்வாழ்க்கை மீது அவருக்கு இருந்த அக்கறை பற்றிக் கூறுகின்றன.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

43. அ

**களப்பிரர் என்பவர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சி கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?**

- ❖ களப்பிரர் காலம் என்பது சங்க காலத்திற்கும், பல்லவர் – பாண்டியர் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் ஆகும்.
- ❖ தமிழக வரலாற்றில் பொ.ஆ. 300 – 600 வரை களப்பிரர் காலம் என அறியப்படுகிறது.
- ❖ களப்பிரர்களின் ஆட்சி தமிழகத்தின் இருண்டகாலம் ஆகும் .
- ❖ களப்பிரர்கள் மூவேந்தர்களையும் வீழ்த்தி ஆட்சியையும் கைப்பற்றினர்.
- ❖ பூலாங்குறிச்சிக் கல்வெட்டு சிவகங்கை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- ❖ சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ அவர்களது குடும்பம், வம்சாவளி பற்றி குறிப்புகள் இல்லை.
- ❖ களப்பிரர்கள் காலத்தில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இயற்றப்பட்டன.
- ❖ பொ.ஆ. 6 ஆம் நூற்றாண்டில் களப்பிரர்களின் ஆட்சி பாண்டியர்களால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

ஆ

**"குப்தர்கள் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்".விவாதிக்கவும்.**

**குப்தப் பேரரசு எழுச்சி**

- ❖ குப்த அரசு இந்தியாவில் ஒரு பெரும் சக்தியாக உருவானது.
- ❖ மத்தியில் ஒரு வலுவான அரசு அமைந்ததால் அதன் கீழ் பல அரசுகள் இருந்தன.
- ❖ கடல் கடந்த வாணிபத்தால் பொருளாதாரம் எழுச்சி கண்டது
- ❖ பண்பாட்டு முதிர்ச்சி காணப்பட்டது

**கட்டடக்கலை மற்றும் ஓவியக்கலை**

- ❖ பாறைகளைக் குடைந்து கட்டப்படும் குடைவரைக் கோயில்கள் எழுப்பினர்.
- ❖ எ.கா.அஜந்தா, ஏல்லோரா மற்றும் பாக் ஆகிய இடங்களில் உள்ளன.
- ❖ குப்தர் கால ஓவியக்கலை வளர்ச்சி பெற்றது.
- ❖ சுவரோவியங்கள் அஜந்தா, பாக், பாதாமி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

**உலோகக் கலை**

- ❖ டெல்லியில் உள்ள "மெஹ்ரோலி" இரும்புத்தூண் இன்றளவும் துருப்பிடிக்காமல் உள்ளது.
- ❖ நாளந்தாவில் உள்ள புத்தரின் 18 அடி செம்புச் சிலை
- ❖ சுல்தான்கஞ்சில் உள்ள 7 ½ அடி புத்தர் சிலை
- ❖ இவை இரண்டும் உலோகக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்

**இலக்கியம்**

- ❖ சமுத்திர குப்தரின் அவையை அலங்கரித்த " காளிதாசர்" மிகச் சிறந்த அறிஞர் ஆவார்.
- ❖ சூத்ரகர், விசாகதத்தர் போன்ற அறிஞர்களும் பல படைப்புகளை வெளியிட்டனர்.
- ❖ சமண, பௌத்த இலக்கியங்களும் தோன்றின.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

**கல்வி**

- ❖ தட்சசீலம், நாளந்தா, விக்ரமசீலா போன்ற பெரிய கல்வி நிறுவனங்கள் தோன்றியது.
- ❖ நாளந்தா பல்கலைக்கழகத்தை குப்தர்கள் ஆதரித்தனர்.
- ❖ இங்கு கல்வி கற்பதற்கு மாணவர்கள் வெகு தொலைவில் இருந்து வந்தனர்.

**குப்தர் கால அறிவியல்**

**ஆரியபட்டர்**


- ❖ ஆரியபட்டீயம் என்ற நூலில் கணிதம், கோணவியல், அல்ஜிப்ரா பற்றி எழுதியுள்ளார்
- ❖ சூரிய சித்தாந்தா என்ற நூலில் பூமி ஒரு அச்சில் தன்னைத்தானே சுற்றுகிறது என்று கண்டுபிடித்த வானவியல் அறிஞர் ஆவார்.

**வராகமிகிரர்**

- ❖ பிருஹத்சம்ஹிதா என்ற நூலில் வானவியல், புவியியல், தாவரவியல், இயற்கை வரலாறு ஆகியவற்றிற்கான கலைக்களஞ்சியம் ஆகும்.

இத்தகைய காரணங்களால் பண்டைய இந்தியாவில் குப்தர்கள் காலம் பொற்காலம் என்று கூறப்படுகிறது

44. அ



ஆ

**பல்லவ அரசர்கள் வெளியிட்ட நிலக்கொடை ஆணைகளின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டு.**

**நிலவுடைமை முறை**

- நிலவுடைமை உரிமை அனைத்தும் அரசரிடமே இருந்தது.
- அரசர் அதிகாரிகளுக்கு வருவாய் மானியங்களையும் பிராமணர்களுக்கு நில மானியங்ளையும் வழங்கினர்
- அரசருக்கு சொந்தமான நிலங்களை குடியானவர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டன.
- குத்தகைக்கான கால அளவைப் பொறுத்து கிராமங்களின் தகுதி நிலைகள் மாறுபடும்

**பிரம்மதேய கிராமங்கள்**

- பிரம்மதேய கிராமங்கள் பிராமணர்களுக்கு வழங்கப்பட்டது
- வரி செலுத்த வேண்டியதில்லை என்பதால் இக்கிராமங்கள் செழிப்பாக இருந்தன.

**தேவதானக் கிராமங்கள்**

- கோவில்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட கிராமங்கள் தேவதானக் கிராமங்கள் ஆகும்.
- இவற்றின் வருவாயைக் கோவில் நிர்வாகம் பெற்றது.
- கோவில் பணிகளில் வேலைவாய்ப்பு வழங்கி , கோவில்கள் கிராமங்களுக்கு உதவின.

45. அ

**முதலாம் முகமது ஆட்சியின் கீழ் பாமினி அரசு பற்றிக் குறிப்பு வரைக.**

**முதலாம் முகமதுவின் வெற்றிகள்**

- ரெய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியை கைப்பற்றுவதில் விஜயநகர அரசுடன் நீண்டகாலம் போர் புரிந்தார்
- 1363 ல் வாரங்கலை கைப்பற்றினார்
- கோல்கொண்டா கோட்டையை தாக்கி கைப்பற்றிக் கொண்டார்.

**நிர்வாகச் சீர்திருத்தம்**

- முதலாம் முகமது சிறந்த அரசு முறை நிர்வாகத்தைப் பின்பற்றினார்
- எட்டு அமைச்சர்கள் கொண்ட குழுவை ஏற்படுத்தினார்
- வழிப்பறி கொள்ளையர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தார்
- நிறுவன மற்றும் புவியியல் ரீதியில் அவர் ஏற்படுத்திய ஒருங்கிணைப்பே அரசுக்கு திடமான அடித்தளத்தை உருவாக்கியது

**மசூதிகள் எழுப்புதல்**

- முதலாம் முகமது குல்பர்காவில் இரு மசூதிகளை எழுப்பினார்.
- அதில் ஒரு மசூதி 1367 ல் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டது

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

ஆ

**பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.**

- ஒரு கடவுள் கொள்கையைப் பின்பற்றினர்.
- இறைவனிடம் ஆழமான பற்றும் நம்பிக்கையும் கொள்வதன் மூலம் முக்தி அடையலாம்.
- பிறப்பு – இறப்பில் இருந்து விடுபட முடியும் என நம்பினர்
- இறைவனுடைய அருளைப் பெற அர்ப்பணிப்பை வற்புறுத்தினர்
- குருவானவர் வழிகாட்டியாகவும், ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்
- உலக சகோதரதுவத்தை போதித்தனர்
- உருவ வழிபாட்டை விமர்சனம் செய்தனர்
- அனைத்து உயிரினங்களும் கடவுளின் குழந்தைகளே எனக் கூறினர்
- சாதிமுறையை கண்டனம் செய்தனர்
- சடங்குகள், சம்பிரதாயங்கள், புனித யாத்திரைகள், நோன்புகள் ஆகியவற்றை எதிர்த்தனர்.
- மக்களின் மொழிகளில் பாடல்கள் இயற்றினர்.
- ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாடவேண்டும் என வலியுறுத்தினர்

46. அ

**முகலாயக் கட்டடக்கலையின் சிறப்பம்சங்களைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.**

**அக்பர்**

- அக்பர் ஆட்சிக்காலத்தில் ஹுமாயூனின் கல்லறையை பாரசீகக் கட்டடக்கலை வல்லுநர்களால் வடிவமைக்கப் பட்டு இந்தியக் கலைஞர்களால் கட்டப்பட்டது.
- அக்பரின் புதிய தலைநகரான பதேபூர் சிக்ரியில் அழகிய கோட்டைகள், நுழைவு வாயில்கள் சிவப்பு பளிங்கு கற்களால் கட்டிய புலந்தர்வாசா கட்டிடம் முகலாயர்களின் சாதனைகளாகக் கருதப்படுகிறது.

**ஜஹாங்கீர்**

- ஜஹாங்கீர் தன் மனைவி நூர்ஜகானின் தந்தையான இதிமத் – உத் – தௌலா வுக்காக வெள்ளை நிறப் பளிங்குக்கற்களைக் கொண்டு கல்லறை எழுப்பினார்.

**தாஜ்மகால்**


- தாஜ்மகால் முகலாயக் கட்டிடக்கலையின் மறுவடிவமாகக் கருதப்படுகிறது.
- தாஜ்மகால் முழுவதும் பளிங்குக் கற்களால் உயர்ந்த தளத்தின் மீது கட்டப்பட்டதாகும்.
- ஒரு கவிகை மாடத்தையும், அதைச் சுற்றி நான்கு ஸ்தூபி மாடங்களையும் கொண்டது.
- நான்கு மூலைகளிலும் நான்கு கோபுரங்களையும் கொண்டது.
- இது உலகப் புகழ் பெற்றுள்ளது.

ஷாஜகான் காலத்தில் முகலாயக் கட்டடக்கலை அதன் சிகரத்தை எட்டியது

**ஔரங்கசீப்**

- ஔரங்கசீப் ஆட்சிக்காலத்தில் லாகூரில் பாதுஷாகி மசூதி கட்டப்பட்டது
- ஔரங்காபாத்தில் ரபீயா உத் தௌராணியின் பளிங்கிலான கல்லறையும் கட்டப்பட்டது. இக்கல்லறை பெண்ணின் கல்லறை என்று அழைக்கப்படுகிறது.

ஆ ஏதேனும் 5 நிகழ்வுகள்




47. அ

**இந்தியாவில் போர்த்துகீசியரின் வருகையினால் ஏற்பட்ட தாக்கத்தை விவரி**

- இந்திய அரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஐரோப்பியர் இந்திய அரசர்களை வென்று அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றினர்
- இந்திய அரசர்களிடையே இருந்த ஒற்றுமையின்மையை தனக்கு சாதகமாக்கிக் கொண்டனர்
- ஐரோப்பியர்கள் போரில் வெடி மருந்துகள், பீரங்கிகள் புதிதாக அறிமுகம் செய்தனர்
- ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் இடையிலான திருமணங்களை ஊக்குவித்தனர்
- இதன்மூலம் புதிய யூரேசிய இனக்குழு உருவானது
- சென்னை சாந்தோம் போர்த்துகீசியரின் வருகைக்கான சான்றாக உள்ளது
- மயிலாப்பூரை கருப்பர் நகரம் என்று அழைத்தனர்.
- இயேசு சபையைச் சார்ந்த சமயப்பரப்பாளர்கள் இந்தியா வந்தனர்
- இந்துக்கள் கிறித்தவர்களாக மதம் மாற்றப்பட்டனர்.
- போர்த்துகீசியர்கள் அரேபியரின் வணிக முற்றுரிமையை கட்டுப்படுத்தினர். ஆனால் அது ஆங்கிலேயருக்கு உதவியது

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

ஆ

**1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களையும் மற்றும் விளைவுகளையும் விவரிக்கவும்**

**1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்கள்**

**டல்ஹௌசியின் வாரிசு உரிமை இழப்புக்கொள்கை**

- ❖ டல்ஹௌசியின் வாரிசு உரிமை இழப்புக்கொள்கையின் மூலம் அவுத் மற்றும் ஜான்சி இணைத்துக்கொள்ளப்பட்டது
- ❖ நானாசாகிப்பை அவமானமாக நடத்தியது பெரும் அதிருப்தியை இந்தியர்களியே ஏற்படுத்தியது

**நிலவருவாய் முறை**

- ❖ நிலவருவாய் முறையினால் இந்தியர்கள் ஆங்கிலேயருக்குத் எதிராகத் திரும்பினர்
- ❖ ஆங்கிலேயர் நிலவருவாயை வரியாகக் கருதாமல் வாடகையாக கருதினர்
- ❖ நிலத்தில் விவசாயம் செய்தாலும், செய்யாவிட்டாலும் அதே அளவு வரி வசூலிக்கப்பட்டது.
- ❖ இதனால் விவசாயிகள் துயரங்களுக்கு உள்ளாயினர்

**மத உணர்வுகள்**

- ❖ சதி ஒழிப்புச்சட்டம், விதவை மறுமணச்சட்டம், பெண்குழந்தை கொல்லப்படுவதற்கு எதிரான சட்டம் ஆகியவை சமய நம்பிக்கைகளில் ஆங்கில அரசு தலையிடுவதாகக் கருதப்பட்டது
- ❖ கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்களுக்கு சொத்தில் பங்கு உண்டு என்று கூறும் "லெக்ஸ் லோசி சட்டம்" இயற்றியது இந்துக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது.

**உடனடிக்காரணம் (or) என்பீல்டு துப்பாக்கி அறிமுகம்**

- ❖ பதிதாக அறிமுகமான என்பீல்டு துப்பாக்கியை பயன்படுத்துவதற்கு முன்பு அதை படை வீரர்கள் வாயால் கடித்து உறையை அகற்ற வேண்டும்
- ❖ என்பீல்டு துப்பாக்கியில் பசு மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்டிருந்தது.
- ❖ இது இந்து – முஸ்லீம் படைவீரர்களின் மத உணர்வுகள் புண்பட்டன
- ❖ என்பீல்டு துப்பாக்கியை பயன்படுத்த மறுத்து பரக்பூரில் முதன்முதலில் இராணுவ கலகம் தொடங்கியது. மங்கள் பாண்டே தனது இராணுவ மேல் அதிகாரியை சுட்டுக் கொன்றார். இதனால் அங்கு புரட்சி வெடித்தது

**1857 ஆம் ஆண்டு பெருங்கிளர்ச்சிக்கான விளைவுகள்**

- ❖ கானிங்பிரபு இந்தியாவின் முதல் வைசிராய் ஆனார்
- ❖ இந்தியா அரசுச் செயலர் மூலம் ஆளப்படும்
- ❖ 15 உறுப்பினர்கள் கொண்ட இந்திய கவுன்சில் அரசு செயலருக்கு உதவி செய்யும்
- ❖ கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்குழுவும் கட்டுப்பாட்டு குழுவும் ஒழிக்கப்பட்டன
- ❖ இந்திய அரசர்களின் கண்ணியம், உரிமைகள் மதிக்கப்படும்
- ❖ கிளர்ச்சியாளர் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும்
- ❖ சாலைகள், இருப்புப்பாதைகள், தந்தி, நீர்ப்பாசனம் ஆகியவை முடுக்கிவிடப்படும்
- ❖ வாரிசு இழப்புக் கொள்கை, நாடிணைக்கும் கொள்கை கைவிடப்படும்